வெளியீடு : 6
நிழற்படப் பதிப்பு

தொல்காப்பியம் – நன்னூல்

சொல்லதிகாரம்

வித்துவான் க.வெள்ளைவாரணர்
பேராசிரியர், இலக்கியத்துறை
தமிழ்ப் பல்கலைக் கழகம்

தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்.

தமிழ்ப் பல்கலைக் கழக
வெளியீடு : 6.
நிழற்படப் பதிப்பு

தி. ஆ. 2015 - அத்திரை
மே - 1984

விலை உரூ. 75/-

கிடைக்குமிடம் :
இயக்குநர், பதிப்புத் துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர் - 613 001.

அச்சு :
தமிழ்ப் பல்கலைக் கழக
மறுதோன்றி அச்சகம்.
தஞ்சாவூர்.

தொல்காப்பியம் — நன்னூல்
சொல்லதிகாரம்
நிழற்படப் பதிப்பு

தமிழ்ப் பல்கலைக் கழகப் பதிப்புரை

தமிழ் இலக்கண நூல் வரிசையில் தொல்காப்பியமும் நன்னூலும் குறிப்பிடத்தக்க சிறப்பிடம் பெற்றவை. இரு நூல்களுக்கும் இடைப்பட்ட காலத்து மொழிப்புலம், அடித்தளம் சிதையாதது; எனினும் பல மாற்றங்களைப் பெற்றது. எனவே, இரு நூல்களையும் ஒப்பியல் முறையில் நோக்குதல் தேவையாகும்.

இந்நோக்கில் அடிப்படையிடும் ஆய்வைப் பேரா. க.வெள்ளைவாரணர் மேற்கொண்டு இருபெரு நூல்களின், எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் இரண்டையும் தனித்தனியே ஒப்பீடு செய்துள்ளார்கள். இது சொல்லதிகார ஒப்பியல் நோக்கு.

தமிழ்ப் பல்கலைக் கழகம் இதனை வெளியிட்டுக்கொள்ள இசைவு நல்கிய பேராசிரியர் அவர்கட்கு நன்றி தெரிவிக்கின்றோம்.

இதன் தேவைப்பாடு கருதியும், பயில்வோர்க்கு உதவும் நோக்குடனும் இது வெளியிடப்படுகின்றது.

தி. ஆ.2015—சித்திரை
மே—1984
தஞ்சாவூர்.

பதிப்புத் துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம்.

பதிப்புரை

அண்ணமலைப் பல்கலைக்கழகத்தில் 1935 முதல் 1937 வரை யான் தமிழாராய்ச்சி மாணவனாக இருந்தபொழுது இயற்றமிழிலக்கண நூலாகிய தொல்காப்பியத்திலும் அதன்வழி நூலாகிய நன்னூலிலும் கூறப்பெற்றுள்ள எழுத்திலக்கண விதி களை ஒப்புநோக்கி ஆராய்ந்து 'தொல்காப்பியம்-நன்னூல்-எழுத்ததிகாரம்' என்னும் ஆராய்ச்சியுரையினை எழுதும் பணியினை என் பேராசிரியப் பெருந்தகை நாவலர் டாக்டர் ச. சோமசுந்தர பாரதியார் அவர்கள் எனக்கு அன்புடன் வழங்கினர்கள். அப்பொழுது எழுதப்பெற்ற தொல்காப்பியம்-நன்னூல்-எழுத்ததி காரவுரைப் பகுதி அண்ணமலைப்பல்கலைக்கழகத்துணரில் 1941-முதல் தொடர்ந்து வெளிவந்தது. அவ்வுரைப் பகுதி 1962-ல் அண்ணமலைப்பல்கலைக்கழகத்தின் சார்பில் நூலுருவாக வெளி வந்தது.

அதனைத் தொடர்ந்து தொல்காப்பியச் சொல்லதிகாரத் தையும் நன்னூற் சொல்லதிகாரத்தையும் ஒப்பிட்டு ஆராய்ந்து வெளியிடுதல் வேண்டும் என அன்பர் பலரும் விரும்பியதற்கு ஏற்ப அவ்வப்பொழுது தொகுத்த குறிப்புக்களை அடியொற்றித் 'தொல் காப்பியம்-நன்னூல்-சொல்லதிகாரம்' என்னும் இவ்வுரை நூல் வெளியிடப் பெறுகின்றது.

அச்சிடுதற்கு ஏற்ற வண்ணம் இந்நூலைப் படியெடுக்கும் பணி என் மகள் செல்வி. திரு. மங்கையர்க்கரசியால் திருத்தமுறச் செய்யப்பெற்றது. அண்ணமலைப்பல்கலைக்கழகத் தமிழ்த்துறை விரிவுரையாளர் டாக்டர் சோ. ந. கந்தசாமி, M.A., Ph. D. அவர்கள் இந்நூலின் திருத்தப்படிகளை ஒப்பு நோக்கித் திருத்தியுதவி னர்கள். இவர்களுக்கு இறைவன் திருவருளால் எல்லா நலங்களும் உளவாதல் வேண்டும் என உளமார வாழ்த்துகின்றேன்.

மதுரைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனுர் அவர்கள் தமக்குள்ள பல்வேறு அலுவல் களுக்கிடையே எனது வேண்டுகோளையும் அன்புடன் ஏற்று இந் நூலுக்கு அழகிய தோர் அணிந்துரை அளித்தார்கள். தமிழ் நலம் வளர்க்கும் இப்பெருந்தகையார்க்கு எனது நன்றியினையும் வணக்கத்தினையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஒன்றும் போதாச் சிறியேனை இத்தகைய செந்தமிழ்ப்பணிக்கு உரியவனுக்கிய வள்ளல் அண்ணுமலையரசரது பேரன்பின் திறத்தை எழுமையும் நினைந்து போற்றுங் கடமையுடையேன். இப்பணியினை இனிது நிறைவேற்றியருளிய எனது வாழ் முதலாகிய முருகப்பெருமான் திருவடிகளை இறைஞ்சிப் போற்று கின்றேன்.

இந்நூலினை அழகிய முறையில் ஆர்வமுடன் அச்சிட்டுதவிய அண்ணுமலைநகர் சிவகாமி அச்சகத்தார்க்கு எனது பாராட்டும் நன்றியும் என்றும் உரியவாகும்.

தமிழ் மாணவருலகம் இந்நூலினை விரும்பியேற்றுப் பயன் கொள்ளும் என நம்புகிறேன்.

142, கனகசபைநகர்
சிதம்பரம்
12.9.71

க. வெள்ளைவாரணன்